DEPOSITION OF THE WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM
**Case no: CC.No. 58/2023**
**prosecution witness: Pw 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused present**
வாக்குமூலம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனீஸ்வரி | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**18.07.2023**
முதல் விசாரணை:-

1. நான் பாம்பன் தரவைத்தோப்பில் வசித்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 14.06.2022-ம் தேதி காலை 09.00 மணியளவில் எதிரியின் நாய் அ.சா.1 க்கு சொந்தமான ஆட்டை கடித்துவிட்டது. அதுசம்பந்தமாக மாலை 06.00 மணியளவில் அ.சா.1 க்கும் எதிரிக்கும் சண்டை நடந்தது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

1. போலீசார் விசாரணையில் கடந்த 14.06.2022-ம் தேதி மாலை 06.30 மணியளவில் ஆஜர் எதிரி அ.சா.1 வீட்டிற்குள் சென்று அ.சா.1 ஐ அசிங்கமாக பேசி, வீட்டிற்கு வெளியில் அவரை இழுத்து காலால் மிதித்தார் என்றால் சரியல்ல. அவரை தடுக்க வந்த அ.சா.2 ஐ எதிரி அருகில் கிடந்த கம்பை எடுத்துஅடித்தார் என்றால் சரியல்ல. அதில் அ.சா.2 க்கு ஊமைக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

2. பின்பு எதிரி அ.சா.1 னின் கழுத்தில் இருந்த தாலியை கையால் அறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. பின்பு எதிரி அ.சா.1 ஐ ஒழுங்காக ஊரைவிட்டு ஓடிவிடு இல்லை என்றால் உன்னையும், உன்

கணவரையும் தீ வைத்து எறித்துவிடுவேன் என்று மிரட்டியதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது  உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.